ப/சரஸ்வதி மத்திய கல்லூரி

பதுளை

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை – 2020

தரம் - 07 விஞ்ஞானம்

பெயர் : ..... **திரு.த.சன்தீவ் B.Ed(R),NDT(Science)**

- **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**
  - **அலகு – 05 அமிலமும், மூலமமும்**

1. அமிலம் என்றால் என்ன? உதாரணம் தருக?
2. மூலம் என்றால் என்ன? உதாரணம் தருக?
3. நடுநிலைப்பதார்த்தம் என்றால் என்ன? உதாரணம் தருக?
4. காட்டிகள் என்றால் என்ன?
5. காட்டிகள் தொடர்பாக கீழ்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக?

காட்டிகள்	அமிலத்துடன் நிறமாற்றம்	மூலத்துடன் நிறமாற்றம்	நடுநிலைப்பதார்த்ததுடன் நிறமாற்றம்
சிவப்பு சாயத்தாள்			
நீல சாயத்தாள்			
P^H			
பினோப்தலீன்			
மெதைல் செம்மஞ்சள்			

6. இயற்கை சூழல்களில் இருந்து பெறக்கூடிய காட்டிகளுக்கு உதாரணம் தருக?
7. ஆய்வுக்கூடங்களில் பொதுவாகப் பயன்படுத்தும் காட்டிகள் எவை?
8. P^H தாளில் பெறப்படும் பொருட்களின் பெறுமான வீச்சினை தருக?
   1. அமிலம்
   2. காரம் / மூலம்
   3. நடுநிலையானவை

- **அலகு – 06 விலங்குகளின் பல்வகைமை**

1. அங்கிகளை கூட்டமாக்குவதன் நோக்கம் யாது?
2. முள்ளந்தண்டுளி என்றால் என்ன? உதாரணம் தருக?
3. முள்ளந்தண்டிலி என்றால் என்ன? உதாரணம் தருக?
4. முள்ளந்தண்டுளிகளை மேலும் எவ்வாறு வகைப்படுத்தலாம்? அவற்றினை வகைப்படுத்தி உதாரணம் தருக?

www.ikedu.lk

5. இசைவாக்கம் என்றால் என்ன?
6. ஒரு அங்கி குறித்த சூழலிற்கு தம்மை இசைவாக்கிக்கொள்வதன் நோக்கம் யாது?
7. பெரும்பாலும் விலங்குகள் உயிர்வாழ்வதற்காக கொண்டுள்ள இசைவாக்கங்கள் எவை?
8. பொய்க்கோலம் என்றால் என்ன? பொய்க்கோலம் பூணும் அங்கிகளுக்கு உதாரணம் தருக?

9. கீழ்வரும் இசைவாக்க பண்புகள் அவ்வங்கியின் நிலைபேற்றினை எவ்வாறு உறுதிசெய்கின்றன எனக் குறிப்பிடுக?
    1. பொய்க்கோலம் பூணுதல்
    2. அருவிக்கோட்டு வடிவ உடலமைப்பினை கொண்டிருத்தல்.

1. இருக்கிளைச்சாவி என்றால் என்ன?
2. இருக்கிளைச்சாவிக்குரிய பண்புகள் எவை?
3. இருக்கிளைச்சாவியினை பயன்படுத்தி கீழ்வரும் விலங்குகளை வகைப்படுத்துக?
    1. யானை
    2. திமிங்கிலம்
    3. கிளி
    4. பாம்பு
    5. பச்சோந்தி
    6. நத்தை

- **அலகு – 07 சக்தி வடிவங்களும் பயன்பபடுகளும்**

1. நாம் அன்றாடம் ஆற்றும் வேலைகளுக்கு உதாரணம் தருக?
2. சக்தி என்றால் என்ன? சக்தியை அளவிடும் சர்வதேச அலகு எது?
3. பிரதான சக்திவடிவங்களை தருக?
4. இயக்கசக்தி என்றால் என்ன?
5. இயக்கசக்தியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் வேலைகள் எவை?
6. சக்தி நிலைமாற்றம் எனப்படுவது யாது? சக்தி நிலைமாற்றத்திற்கு 3 உதாரணம் தருக?.
7. அழுத்தசக்தி என்றால் என்ன?
8. அழுத்தசக்தியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் வேலைகள் எவை?
9. மின் சக்தியினைப் பயன்படுத்தி நாம் ஆற்றும் வேலைகள் எவை?
10. ஒலிச்சக்தி என்றால் என்ன?
11. ஒலிச்சக்தி உருவாகும் சக்தி நிலைமாற்றங்கள் சிலவற்றை தருக?
12. அன்றாட வாழ்வில் நாம் மின் சக்தியினைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் எவை?
13. ஒளித்தொகுப்பு என்றால் என்ன?
14. வெப்பம் காரணமாக பொருட்களில் ஏற்படும் மாற்றங்கள் எவை?
15. வெப்பச்சக்தியினைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் எவை?
16. அனல் மின்நிலையங்களில் எவ்வாறு மின்னுற்பத்தி நிகழ்கிறது?

www.lkedu.lk

17. இரசாயன பொருட்கள் என்றால் என்ன?
18. இரசாயனசக்தி என்றால் என்ன?
19. இரசாயன சக்தியினைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் எவை?
20. பொறிமுறைச்சக்தி என்றால் என்ன?

- **அலகு 08 புவியினதும் விண்வெளியினதும் தன்மை**

1. ஞாயிற்றுத்தொகுதியில் உள்ள ஏனைய கோள்களுடன் ஒப்பிடுகையில் புவி ஏன் தனித்துவம் மிக்க கோளாக காணப்படுகிறது?
2. புவி அதிர்வலைகள் எவ்வாறு உருவாகுகிறது?
3. புவி அதிர்வலைகளை பதிவு செய்யும் கருவி எது?
4. புவியின் உட்பகுதியின் மூன்று பிரதேசங்களையும் தருக?
5. புவியோடு என்றால் என்ன? புவியோட்டின் இயல்புகளைக் குறிப்பிடுக?
6. மென்மூடியின் இயல்புகளைத் தருக?
7. அகணியின் பண்புகளைக் குறிப்பிடுக?
8. படம் வரைந்து புவியின் உட்பகுதிகளைக் குறித்துக்காட்டுக?
9. புவித்தகடுகளின் பங்களிப்பு யாது?
10. புவித்தகடுகள் இயங்கும் 3 விதங்களையும் குறிப்பிடுக? இவ்வாறு இயங்குவதால் ஏற்படும் விளைவுகளையும் குறிப்பிடுக?
11. புவித்தகடுகள் எவ்வாறு அசையும்?
12. புவித்தகடுகள் காணப்படும் இடங்களுக்கு உதாரணம் தருக?


- **அலகு- 09 ஒளி**

1. நிறைவணுகு நிழல் எவ்வாறு தோன்றுகிறது?
2. சந்திரகிரகணம் எவ்வாறு தோன்றுகிறது?
3. சூரிய கிரகணம் எவ்வாறு தோன்றுகிறது?
4. ஒளித்தொகுப்பு என்றால் என்ன?
5. தளவாடியில் ஒளித்தெறிப்படையும் விதத்தை காட்டுக.
6. மெய்விம்பம், மாயவிம்பம் என்றால் என்ன?
7. தளவாடியில் பெறும் விம்பத்தின் இயல்புகளை தருக.
8. பக்க நேர்மாற்றம் என்றால் என்ன?
9. பக்க நேர்மாற்றம் அம்பியுலான்ஸ் வண்டிகளில் எவ்வாறு பயன்படுகிறது?
10. பல்விம்பம் என்றால் என்ன?
11. பல்விம்ப தோற்றப்பாடு பயன்படுத்தப்படும் சந்தர்பங்கள் எவை?
12. இரு தளவாடிகளை பின்வரும் கோணங்களில் வைத்தது பொருள் ஒன்றை வைக்கும் போது தோன்றும் விம்பங்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.

1. 90° 2. 60° 3. 45° 4. 30°

www.ikedu.lk

13. தளவாடிகளை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களை தருக.
14. கலையுரு காட்டியினுள் பல்விம்பம் தோற்றம் எவ்வாறு தோன்றுகிறது?
15. சூள்க்காட்டியினை அமைக்கும் முறைகளை தருக.
16. வளைவாடிகளின் இரு வகைகளும் எவை?
17. குவிவாடி, குழிவாடி என்பவற்றை வேறுபடுத்துக.
18. ஒளிக்கற்றை எவ்வாறு உருவாகிறது
19. கீழ்வரும் ஒளிக்கற்றைகளை பெயரிடுக


20. குழிவாடியொன்றில் படும் சமாந்தர ஒளிக்கற்றையில் ஏற்படும் மாற்றம் யாது. என்பதை படத்தின் உதவியுடன் விளக்குக.
21. குவிவாடியொன்றில் படும் சமாந்தர ஒளிக்கற்றையில் ஏற்படும் மாற்றம் யாது. ஏன்பதை படத்தின் உதவியுடன் விளக்குக.
22. கீழே குழிவாடி ஒன்றின் முன்னே A.B.C.D ஆகிய இடங்களில் மெழுகுவர்த்தி ஒன்றுவைக்கப்பட்டது. அதன் போதான அவதானங்கள் குறித்த கீழ்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக.

மெழுகுவர்த்தி வைக்கப்பட்ட இடம்	விம்பத்தை திரையில் பெறமுடியும்/ பெறமுடியாது	விம்ப இயல்பு	அளவு
A			
B			
C			
D			

22. அன்றாட வாழ்வில் குழிவாடி பயன்படுத்தப்படும் சந்தர்பங்கள் எவை?
23. கீழே குவிவாடி ஒன்றின் முன்னே A.B.C. ஆகிய இடங்களில் மெழுகுவர்த்தி ஒன்றுவைக்கப்பட்டது. அதன் போதான அவதானங்கள் குறித்த கீழ்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக.

மெழுகுவர்த்தி வைக்கப்பட்ட இடம்	விம்பத்தை திரையில் பெறமுடியும்/ பெறமுடியாது	விம்ப இயல்பு	அளவு
A			
B			
C			

24.குவிவாடி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை தருக.

www.ikeda.lk

www.lkedu.lk